வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 02.10.2024 புதன்கிழமை | இதழ் : 276 | பக்கங்கள் : 12




# புதிய அரசமைப்பு மூலம் இனப் பிரச்னைக்கு தீர்வு

## அறிவித்தது அரசாங்கம்

- தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்போம்



கொழும்பு, ஒக்ரோபர் 02

**புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசின் முதலாவது அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், அரசாங்கத்தை அமைப்பதற்காக பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவுள்ளது. பாராளுமன்ற தேர்தலின் ஊடாகவே அரசாங்கம் அமைக்கப்படும்.

இந்நிலையில், எம்முடைய விஞ்ஞாபனத்துக்கு அமைய

11

## புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்துவதை இடைநிறுத்துக

### ஜனாதிபதி அநுர உத்தரவு

கொழும்பு, ஒக். 02

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வினாத்தாள் பிரச்னை தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த பெற்றோர்களுக்கும் இடையிலான சந்திப்பு

11

## பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை

### சார்ள்ஸ் நிர்மலநாதன் அறிவிப்பு

மன்னார், ஒக். 02

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதற்காக பாராளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிடவில்லை - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

தனது சமூகவலைதளத்தில் அவர் இந்த பதிவை வெளியிட்டுள்ளார்.

11

## ஈஸ்டர் தாக்குதல்கள் விசாரணை ஆரம்பம்!

### அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 02

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், மத்திய வங்கி பிணைமுறி மோசடி பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுத் தேர்தலை அடுத்து நிச்சயம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்கப்படும் என் றும் அவர் கூறினார்.

முதலாவது அமைச்சரவை கூட்ட முடிவுகளை

11

## ஐ. எம். எவ். ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடப்படமாட்டாது

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 02

இன்றைய தினம் இலங்கை வரும் ஐ. எம். எவ். குழுவினருடன் முன்னர் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடப்பட மாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதிய திட்டத்தை

11

## ஜனாதிபதி அநுரவை சந்தித்தார் சிறீதரன்!

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிறீதரன் நேற்று நேரில் சந்தித்தார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதியை சந்தித்த சிறீதரன் அவருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார். தொடர்ந்து, சிநேகபூர்வமாக உரையாடினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## பொதுச் சின்னத்தில் தேர்தலை சந்திப்பதற்கு நாங்கள் ஆதரவு!

### ரெலோ தலைவர் செல்வம் அறிவிப்பு

- குமார. கோகுலன் -



வவுனியா, ஒக். 02

எல்லோரும் இணைந்து ஒரே அணியாக பொதுச் சின்னத்தில் இந்தத் தேர்தலில் பங்கேற்றால் அதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆதரவாக இருக்கும் - இவ்வாறு அந் தக் கட்சியின் தலைவர் செல்வம்

11

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு, கிழக்கில் நேற்று போராட்டம்!



யாழ்ப்பாணம், ஒக். 02

சர்வதேச சிறுவர் முதியோர் தினமான நேற்று செவ்வாய்க்கிழமை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இந்தப் போராட்டம் ஐ. ஒ. எம். பணிமனை முன்பாக நடைபெற்றது. இதில், காணாமல்

11

## ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க அநுரவை வலியுறுத்துக

### ஜெய்சங்கரை கோருகிறார் ராமதாஸ்!

சென்னை, ஒக். 02

"இலங்கை செல்லும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஈழத் தமிழருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து தேர்தலை நடத்த வேண்டும் என்று புதிய ஜனாதிபதி அநுரகுமாரவை வலியுறுத்த வேண்டும்", என்று தமிழ்நாட்டின் பாட்டாளி மக்கள் கட்சியின் (பா. ம. க) நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

11

## ஆளுநரிடம் நேரடியாக மக்கள் முறையிடலாம்!

யாழ்ப்பாணம், ஒக். 02

வடக்கு மாகாண மக்கள் தங்கள் குறைகளை ஆளுநரிடம் நேரடியாகவோ அல்லது 021 221 9375, 021 221 9376 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலமாகவோ முறையிடலாம் என்று ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

இதுவரை நாளும் வடக்கு ஆளுநரின் பொது மக்கள் குறைகேள் வலையமைப்பான 'அபயம்' ஊடா கவே மக்களின் குறைகள் ஆளுநரின்

11

## கூட்டமைப்பாக ஒன்றிணைய எமக்கு அழைப்பு வரவில்லை!

### கஜேந்திரகுமார் தெரிவிப்பு
### தனித்தே போட்டி என்றும் அறிவிப்பு

- பா.பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஒக். 02

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் ஒன்றிணைவதற்கான அழைப்பு எதுவும் எங்களுக்கு வரவில்லை", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கடந்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வெற்றி பற்றி பல்வேறு ஊகங்கள் கிளப்பப்பட்டு வந்தது ஒன்றும் இரகசியமானது அல்ல. அந்தக் காலத்தில் இளம் அரசியல்வாதி ஒருவர், அவரைச் சந்தித்துபோது அவரிடமே கேட்டாராம்,

"உங்கள் வெற்றி பற்றி பலரும் பலவிதமாக சொல்கிறார்களே அது உண்மையா?" என்று.

அதற்கு அவர், "இரண்டாயிரத்து நான்காம் ஆண்டுத் தேர்தலில் .... (ஒருவர் பெயரைச் சொல்லி) அவர் வெற்றிபெற்றாரா?" என்று பதில் கேள்வியைக் கேட்டிருக்கிறார்.

அப்படியெல்லாம் நடக்குமா? அது சாத்தியமானதா என்பதெல்லாம் இப்போது அவசியமானவை அல்ல. ஆனால், கடந்த தேர்தல்களில் தோல்வியடைந்தவர்கள் பற்றிய செய்தி ஒன்றைப் படித்த போது இந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் கடைசி மத்திய செயல்குழு கூட்டத்தில் நடந்தவை பற்றி, அங்கே உள்ளே இருந்த சில "ஊடகவியலாளர்கள்" விலாவாரியாக எழுதிவிட்டனர் என்பதால் அவைபற்றி எழுதி உங்கள் நேரத்தை வீணடிப்பது அவசியமானதல்ல.

ஆனாலும் அவர்கள் எடுத்த அந்த முடிவு பற்றி பிரஸ்தாபிக்காமல் இருக்க முடியவில்லை.

"கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் எம். பிக்கள் மற்றும் ஏனையோருக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிப்பதில்லையென

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது." - இப்படியொரு செய்தியைப் படித்தபோது அதுகுறித்து பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

தமிழ் அரசு கட்சி பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தப் பத்தியில் விமர்சித்திருந்தாலும், அந்தக் கட்சிமீது எப்போதும் ஒருவித அபிமானம் இருந்துகொண்டே இருக்கின்றது. அதன் பாரம்பரியம் அதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால், அதன் அண்மைக்கால நடவடிக்கைகள் அந்தக் கட்சியை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடியது அல்ல. இத்தனைக்கு மத்தியிலும் தற்போது அதன் மத்திய குழு எடுத்திருக்கின்ற அந்த முடிவு பாராட்டுக்குரியது.

நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற அரசியல் மாற்றம் என்பது தெற்கில் மாத்திரமே ஏற்பட்டிருந்தாலும் அதன் தாக்கம் இன்று வடக்கு, கிழக்கிலும் இளையோர் மத்தியில் ஏற்பட்டிருப்பதை காணமுடிகின்றது.

முழுக்கை சேர்ட்டை கைகளை மடித்துவிட்டு, சாதாரணமாக நம் மத்தியில் வலம்வந்த ஓர் இளைஞர் இன்று நாட்டின் அதி உயர் பதவியில் அமர்ந்திருக்கின்றார். அவருக்கு ஆங்கிலம் தெரியுமா? பொருளியல் தெரியுமா என்றெல்லாம் சமூகவலைத்தளங்களில் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்தியாவில் சுதந்திரத்துக்கு பின்னர் ஒரு மாநிலத்தில் ஆட்சியிலிருந்த ஒரு சாதாரணன் பற்றி பல்வேறு கதைகளை கேள்விப்பட்டிருக்கின்றோம். காமராஜர் என்ற அந்த சாமானியன் ஆட்சியை இன்றுவரை வேறு எவராலும் கொடுக்க முடியவில்லை என்ற குறை இப்போதும் தமிழகத்தில் பேசப்படுகின்றது. அவர் ஒன்றும் சட்டம் படித்த ஜனாதிபதி சட்டத்தரணியோ அல்லது பொருளாதாரம் படித்த கலாநிதியோ அல்ல. அவர் படித்தது வெறும் மூன்றாம் வகுப்புவரைதான். ஆனால், அவரின் ஆட்சியை இன்றுவரை எந்தக் கொம்பனாலும் கொடுக்க முடியவில்லை. அதற்காக நமது நாட்டில் ஆட்சிக்கட்டில் ஏறியிருக்கும் அநுர குமாரவால் காமராஜர் ஆட்சியைத் தந்துவிட முடியும் என்று இங்கே சொல்லப்போவதில்லை. அவர் எத்தகைய ஆட்சியை தரப்போகின்றார் என்பதற்கு ஆரூடம் சொல்ல நான் ஒன்றும் சோதிடன் அல்ல. அது பொறுத்திருந்து பார்க்கவேண்டியது.

அதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது

தெற்கில் ஏற்பட்ட மாற்றத்தின் அதிர்வு வடக்கு, கிழக்கிலும், இளையவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த மாற்றங்களை உள்வாங்கி, அரசியல் செய்யவேண்டிய தேவை இன்று நம்மவர்களுக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதன் பிரதிபலன்தான், தமிழ் அரசு எடுத்துள்ள முடிவு. கடந்த தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்த எவருக்கும் இந்தத் தடவை தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் தருவதில்லை என்ற முடிவு.

இந்த முடிவு எவ்வளவு சிறப்பானதோ அதேபோல, அந்த முடிவை எடுத்தவர்கள் தமக்கு வேண்டியவர்கள் அல்லது தமக்கு "ஜால்ரா" போடுபவர்களுக்கு மட்டும் களம் அமைத்துக்கொடுப்பதாகவும் ஆகிவிடக்கூடாது. அதற்காக இளையவர்களுக்குத்தான் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்பதும் அல்ல, சமூகத்தில் இருக்கும் ஆளுமை உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு சந்தர்ப்பத்தை கொடுப்பதாகவும் இருக்க வேண்டும்.

இந்த விடயம் தமிழ் அரசு மாத்திரம் கவனத்தில் எடுக்க வேண்டிய விவகாரம் அல்ல. இது அனைத்து கட்சிகளும் கவனத்தில் எடுக்கவேண்டிய ஒன்று.

தமிழ் அரசு போலவே, தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் பெரிய கட்சி என்றால், அது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் முக்கியமானது. அந்தக் கட்சியும் இந்தத் தேர்தலில் முக்கிய போட்டி ஒன்றில் களம் இறங்கவிருக்கின்றது. அதிலும் இதுபோன்ற ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். ஆகக் குறைந்தது, அதன் முக்கிய தலைவர்கள் பலர் அரசியலில் தவிர்க்கப்பட முடியாதவர்கள் என்பதால், அவர்கள் தேசியப் பட்டியலின் ஊடாக போட்டியிட்டுக்கொண்டு, ஆளுமை உள்ள இளைஞர்கள், சமூகத்தில் உள்ள ஆளுமைகளை தேர்தலில் போட்டியிடச் செய்யவேண்டும்.

- ஊர்க்குருவி

யாழ். பல்கலைக்கழகத்தில்

## 5ஆவது சர்வதேச தமிழியல் மாநாடு 7ஆம் திகதி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 02

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் மற்றும் அதன் தமிழ்த் துறையின் பொன்விழா ஆண்டு நிறைவை முன்னிட்டு ஐந்தாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டை எதிர்வரும் 7, 8ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டவை வருமாறு,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன் விழா நிகழ்வு வரிசையில் சர்வதேச ஆய்வரங்கின் ஒரு பகுதியாக தமிழ்த்துறை தனது ஐந்தாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டை "இருபதாம் நூற்றாண்டு ஈழத் துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை" என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கிறது.

மானுட விடுதலை தொடர்பில் இருப தாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியங் களின் பங்களிப்பை பல்வேறு நோக்கு நிலை களில் ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதுமே இதன் நோக்கங்களாகும். தமிழியல் ஆய்வு மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். கி. விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கான ஆய்வுக்கட்டுரைகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் முதலானோரிடமிருந்து கோரப் பட்டிருந்தன. ஆர்வத்துடன் பலர் இம் மாநாட்டுக்கான கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர். இந்தியா, டென்மார்க் முதலான நாடுகளிலிருந்தும் ஆய்வுக்கட்டு ரைகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

கிடைக்கப் பெற்ற நாற்பத்தெட்டு (48) ஆய்வுக்கட்டுரைகளும் உரிய முறைப்படுத்தலூடாக துறைசார் நிபுணத்துவம் உடையவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. அவற்றுள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முப்பத்தெட்டு (38) ஆய்வுக்கட்டுரை கள் மட்டும் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர். சு. வித்தியானந்தன் அரங்கு, இலங்கையர்கோன் அரங்கு, மகாகவி அரங்கு, டானியல் அரங்கு என நான்கு அரங்குகளில் அளிக்கை செய்யப் படவுள்ளன.

ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் பல்வேறு புலங்களில் கோலோச்சி வருகின்ற புலமையாளர்கள் சிலரை இனங்கண்டு, அவர்கள் இம்மாநாட்டில் கௌரவிக்கப்பட வுள்ளனர். உயராளுமைக்கான கௌரவத்தை பேராயர். வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன், படைப்பாளுமைக்கான கௌரவத்தை மூத்த மரபுக் கவிஞர் சோ. பத்மநாதன் (சோ. ப), மூத்த எழுத்தாளருக்கான கௌரவங்களை குந்தவை (இரா. சடாச்சர தேவி), அ. யேசுராசா, ஐ. சாந்தன் ஆகியோரும் பெறவுள்ளனர்.

தமிழ்மொழியை மீதான ஈடுபாட்டையும் இலக்கியப் பரிச்சயத்தையும் பரவலடையச் செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் கலைப பீடம் உள்ளிட்ட பிற பீட மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டிப் பரீட்சையையும், வடக்கு மாகாணத்தின் 12 வலயங்க ளிலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, தமிழறிவுப் போட்டிகளையும் இம்மாநாட்டின் இணை நிகழ்வுகளாக முன்னெடுத்துள் ளோம்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகமும் கலைப் பீடமும் அப்பீடத்தின் ஓர் அங்கமாகிய தமிழ்த்துறையும் தமது ஐம்பதாவது ஆண்டு களை நடப்பாண்டில் நிறைவு செய்துள்ளன. அவ்வகையில் இவற்றின் பொன்விழா கொண்டாட்ட வரிசையில், இரண்டாம் நாள் நிகழ்வை "முப்பெரும் விழா" என்ற தலைப்பில் கவிதா நிகழ்வு, நடன அரங்கு, தமிழிசை அரங்கு, கூத்து அரங்கு என்ற வாறாக ஒழுங்கமைத்துள்ளோம்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் அமரர். பேராசிரியர். சு. வித்தியானந்தன் ஈழத்தின் பாரம்பரியக் கூத்துக்களை மீட்டுருவாக்கம் செய்வதில் மிகுந்த அக்கறை உடையவராக விளங்கி னார். அவரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வழங்கி வருகின்ற ஈழத்தின் தென்மோடிக்கூத்தின் செழுமையை வெளிக்கொணரும் வகையில் "காத்தான் கூத்து" இம்முறை இங்கு மீளவும் மேடையேற்றப்படுகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

இந்த மாநாட்டையொட்டி தமிழியல் ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக் கழக சமூகம் பயனுறும் வகையில் பிரபல பதிப்பகங்க ளின் புத்தகக் கண்காட்சிக்கும் புத்தக விற்பனைக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கணிசமான விலைக்கழிவில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெளிவரும் நூல்களை இக்காலப் பகுதியில் கொள்வளவு செய்துகொள்ளலாம். இம்மாநாட்டுக்கான முழுமையான நிதிப் பங்களிப்பை வழமை போன்று "சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசு அறக் கொடை நிதியம்" வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது.

## துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா நாளை

தென்மராட்சி, ஒக். 02

சாவகச்சேரி சிறீ துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா நாளை வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாளை ஆரம்பமாகும் நவராத்திரி விழா எதிர்வரும் 12ஆம் திகதி விஜயதசமியன்று மானம்பூ திருவிழாவும் பிற்பகல் 2.30 மணிக்கு மஹிடாசுரன் சம்ஹாரமும் நடைபெறவுள்ளன.

விஜயதசமியன்று காலை 7 மணிக்கு கும்பச் சரிவும் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்று தொடர்ந்து ஏடு தொடக்குதல் நடைபெறும்.

12 ஆம் திகதி சனிக்கிழமை முதல் கேதார கௌரி விரதம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி விரத பூர்த்தி தினமான நவம்பர் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கௌரி விரத நூல் அணிவிக்கப் படும்.

(ஐ)

## ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் வலுக்கும் உள்ளக சர்ச்சைகள்!

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் ஐக்கிய மக்கள் கூட்டணியில் எழுந்துள்ள உள்ளக சர்ச்சைகள் மேலும் அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

"ப்ளூ ப்ரின்ட்" என அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வெளியீடு தான் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் தோல்விக்கு முதன்மை காரணம் என தெரிவித்து ஒரு குழுவினர் இது தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

விசேடமாக, அந்த விஞ்ஞாபனத்தை தயாரித்த கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம் மற்றும் எரான் விக்ரமரத்ன ஆகியோரை ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருந்து நீக்கவேண்டும் என்ற தீவிர பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.10.2024 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியா கோரும் ஒற்றுமை

வழமைபோல் இந்தியத் தூதுவர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை சந்தித்திருக்கிறார். வழமைபோல் ஒற்றுமை பற்றிப் பேசப்பட்டிருக்கின்றது. அநுர குமாரவுக்கு அழுத்தம் கொடுத்து அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது - வழமைபோல், "நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு குரலில் கோர வேண்டும்" என்று இந்தியத் தூதுவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு - வழமைபோல், கட்சிகளின் தலைவர்கள் தலையை அசைத்துவிட்டு வந்திருக்கின்றனர்.

உண்மையில், ஓரணியாக நிற்க வேண்டிய தேவைப்பாடு முன்னர் எப்போதுமில்லாதவாறு நெருக்கடியை சந்தித்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் ஓரணியாக நின்றவர்கள் தற்போது மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்பதாகப் பிளவுற்றிருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் நிலைமை முன்னரை விடவும் சிக்கலடைந்திருக்கின்றது. சுயாதீன கணிப்புகளின்படி, தமிழ்த் தேசிய கட்சிகள் தற்போதுள்ளதுபோல், பிளவுற்ற நிலையில் போட்டியிடுமாக இருந்தால் ஜே. வி. பிக்கு யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசனம் வருவதற்கான அதிக வாய்ப்பு உண்டு.

தற்போது எதிரிகள் போன்று தங்களுக்குள் மோதிக்கொள்ளும் கட்சிகள் அனைத்துமே ஒரு காலத்தில் ஓரணியாக செயல்பட்ட கட்சிகள்தான். இவர்களுக்கிடையிலான சச்சரவுகளும் முரண்பாடுகளும் கொள்கை நிலைப்பாடானவை அல்ல - மாறாக, தன்முனைப்பிலிருந்தே அதிக குழப்பங்கள் உருவாகின்றன. தன்முனைப்பு வாதங்களுக்குள் சிக்கியே தமிழ்த் தேசிய அரசியல் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு என்ன வழி? அதிக ஆசனங்களை பாதுகாப்பதற்கு என்ன வழி? ஒரேயொரு வழிதான் உண்டு - முடிந்தவரையில் இணக்கப்பாட்டுடன் செயலாற்றுவது. வடக்கில் அது சாத்தியப்படவில்லையாயினும் கிழக்கிலாவது ஒன்றுபட்டு ஆசனங்களை பாதுகாப்பது. இப்போது யார் சரி - யார் பிழையென்னும் வாதத்துக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாவதை விடவும் இன்றைய சூழலை எதிர்கொள்வது எப்படியென்று சிந்திப்பதும் அதற்கேற்ப பொருத்தமான செயலை ஒருங்கிணைப்பதும்தான் இப்போதைய தேவையாகும்.

இதனைப் புரிந்து கொண்டு செயல்படத் தவறினால் தமிழ்த் தேசியக் கட்சிகளின் எதிர்காலம் முற்றிலும் கேள்விக்குள்ளாகும். இங்கு கட்சிகளின் எதிர்காலம் கேள்விக்குள்ளாவது பற்றிக்கூட நாம் அச்சம்கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், புதிய கட்சிகள் தேவைப்பட்டால் அதனை உருவாக்கிக்கொள்ள முடியும். ஆனால், தமிழ் மக்களை மேலும் சிதற அனுமதித்தால், அவர்களை திரும்பவும் ஓரிடத்துக்குக் கொண்டு வருவது முடியாத காரியமாகிவிடும்.

இன்னொரு பெரிய ஆபத்தும் உண்டு. இந்தியாவின் ஒற்றுமை பற்றிய கரிசனையை இந்தப் பின்புலத்தில்தான் நோக்க வேண்டும். அதாவது, வடக்கு, கிழக்கில் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்சிகள் அல்லது அரசியல் கூட்டணி ஒன்றில்லாவிட்டால் இந்தியா யாரை நம்பிப் பேச முடியும்? யாரைக் கொண்டு கொழும்புடன் உரையாட முடியும்? தமிழ்க் கட்சிகள் அதன் இருப்பை தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் இழந்து போகுமானால், தமிழ் மக்கள் தொடர்பில் எந்த அடிப்படையில் மற்றவர்கள் அக்கறையை காண்பிக்க முடியும். கொழும்புடன் மட்டும்தானே பேச முடியும்.

இவ்வாறான விடயங்களை கருத்தில்கொண்டால் தமிழ் கட்சிகள் இன்றைய நிலைமையை புரிந்துகொண்டு செயல்பட முன்வந்தால் மட்டுமே ஒப்பீட்டு அடிப்படையில் அதிக ஆசனங்களை தக்கவைக்க முடியும்.



# சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி...!

**ந. குகதாசன்,**
அபிவிருத்தி அலுவலர் (தகவல் தொழில்நுட்பம்)

காலநிலை மாற்றம் என்ற விடயம் இன்றைய காலகட்டத்தில் பிரதான பேசுபொருளாகி விட்டது. காலநிலை மாற்றம் காரணமாக விவசாயத்துறையே பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்ற நிலையில் உணவுப் பாதுகாப்புத் தொடர்பான அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான பல்வேறு மூலோபாயங்கள் உரையாடப்படுகின்றன.

சனத்தொகை அதிகரிப்பால் உலக சனத்தொகைக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய, புதிய விவசாய நுட்பங்கள் அறிமுகமாகின. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக இரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகள், களைகொல்லிகள் என்பவற்றின் பாவனை அதிகரிக்கத் தொடங்கியது. கூடிய விளைச்சலைத் தரக்கூடிய பயிர் வர்க்கங்கள் அறிமுகமாகின. விவசாயத் துறையை இயந்திர மயமாக்குவதற்கான முயற்சிகளும் ஆரம்பமாகின. மேலும், மனித தேவைகளின் அதிகரிப்பானது பௌதிக வளங்களையும் இயற்கை வளங்களையும் கூடுதலாக நுகர செய்தது. அபிவிருத்தித் தேவையின் காரணமாக இயற்கை வளங்களின் மிதமிஞ்சிய நுகர்வானது இயற்கையைப் பாதிக்க ஆரம்பித்தது. அதன், விளைவாக காலநிலை மாற்றத்தின் விளைவுகளை மனிதகுலம் எதிர்கொள்ள வேண்டி வந்தது. தொடர் மழை வீழ்ச்சி காரணமாகவும், நீண்ட மழைகளற்ற நாட்கள் காரணமாகவும் இயற்கைப் பேரிடர்களை மனித குலம் சந்திக்க நேர்ந்தது.

விவசாயத்துறையின், அதீத தொழில்நுட்ப வளர்ச்சி காலநிலை மாற்றத்தில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. இந்த நிலையில், அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருக்களும் மாற்றமடையத் தொடங்கின. நிலைபேறான அபிவிருத்தி என்ற சிந்தனை அனைத்துத் துறைகளிலும் தொடர்புபடுத்தப்பட்டது. நிலைபேறான அபிவிருத்தி நிலைபேறாக இருக்க வேண்டுமானால், சூழல்நேயம் அவசியம் என்பதனை இயற்கை மனித குலத்திற்கு "காலநிலை மாற்றம்" என்ற வடிவில் உணர்த்தியது. இவ் விடயங்களைத் தொடர்புபடுத்தி நாம் சிந்திப்பதற்கும் செயல்படுவதற்குமான நேரம் இது.

யாழ். மாவட்டத்தின் பொருளாதாரத்தில் விவசாயம் பிரதான பங்கை வகிக்கின்றது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தின் விவசாய முறை முற்றிலும் மாறுபட்டமைகின்றது. பிரதான நீர் வள ஆதாரமாக நிலத்தடி நீர் இருப்பதும் நிலத்தடி நீர் வளம் பருவ மழையில் தங்கியிருப்பதும் இங்கு பொது இயல்பு. ஆகவே, விவசாயத்தில் நீரைச் சிக்கனமாக - வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான தேவையும் பொறுப்பும் எமக்குள்ளது.

அதற்கடுத்தபடியாக நில வளம் மிக முக்கியமானது. அண்மைக்காலமாக, விவசாய விளைநிலங்கள் உட்பட நிலங்கள் கட்டடங்களால் நிரப்பப்படுகின்றன. ஆகவே, எமக்கான விளைச்சல் நிலங்களின் அளவு வெகுவேகமாகக் குறைவடைந்து செல்கின்றது. விவசாய இரசாயனங்களின் தேவைக்கதிகமான பாவனை காரணமாக, நிலத்தடி நீரும் விளை நிலங்களும் தரமிழந்து வருகின்றன. ஆகவே, சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கிய தெளிந்த பார்வை எமக்கிருக்க வேண்டும். மாற்றங்களைப் புரிந்து உள்வாங்கி நாம் செயல்படத் தொடங்குவதற்கான அவகாசம் இது.

இதற்கான சிந்தனையைத் தூண்டுவதற்கும், தொழில்நுட்பங்களை அறிவதற்கும், கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்குமாக, "சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி," எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சியை வட மாகாண விவசாயத் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது. திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி, நான்காம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான, மூன்று தினங்கள் கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளது. 30இற்கும் மேற்பட்ட விடயத் தலைப்புக்களை உள்ளடக்கியதாக இக் கண்காட்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

ஒக்டோபர் - 02 புதன்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 16
நல்ல நேரம் : 09.00 - 10.00
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : அமாவாசை




**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத் தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
சவால்களில், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகளை கொள்முதல் செய்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. பயணங்கள் செலவுக ளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. அலைச்சல் அதிகரிக்கும்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். புதிய வாய்ப்பு கள் தேடி வரும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தேசிய பிரச்னையாக கருத வேண்டும்

## முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம்

சென்னை, ஒக். 02

"தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்வது, கைது செய்து அபராதம் விதிப்பதை தேசிய பிரச்னையாக கருத வேண்டும்"- இவ்வாறு மத்திய அரசுக்கு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு தமிழக மீனவர்களை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு விரட்டியடித்த இலங்கை கடற்படையினர், 29ஆம் திகதி மீண்டும் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 17 தமிழக மீனவர்களை சிறைபிடித்ததுடன், அவர்களின் இரண்டு இழுவைப் படகுகளையும் பறிமுதல் செய்திருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் புதிய ஜனாதிபதி பொறுப்பேற்றாலும், தமிழக மீனவர்களை பொறுத்தவரை பழைய நிலையே தொடர்வது மிகுந்த வேதனையளிக்கிறது.

எனவே, தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்வதை தேசிய பிரச்னையாக கருதி, ஜனாதிபதி அநுரகுமாரவின் கவனத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அமைதியாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்கவும் மத்திய வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்றார். (எ)

# துணை முதல்வர் உதயநிதிக்கு அமைச்சரவையில் 3ஆம் இடம்



சென்னை, ஒக். 02

உதயநிதிக்கு தமிழக அமைச்சரவையில் மூன்றாம் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைச்சரவையில் இணைக்கப்பட்ட அமைச்சர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் பொறுப்பேற்றுக் கொண்டனர். துணை முதல்வருக்கான செயலாளர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, அமைச்சர் உதயநிதி துணை முதல்வராக அறிவிக்கப்பட்டார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி உடனடியாக தலைமைச் செயலகம் வந்து அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் முன்னதாக அமைச்சராக இருந்தபோது ஒதுக்கப்பட்டிருந்த அறை வேறு யாருக்கும் வழங்கப்படாமல் இருந்ததால், அதே அறையில் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, தமிழக அமைச்சரவையில், முதல்வர் மு. க. ஸ்டாலின், அமைச்சர் துரை முருகன் ஆகியோருக்கு அடுத்ததாக 3ஆவது இடத்தில் துணை முதல்வர் உதயநிதிக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. (எ)

# விஜய் கட்சி கொடியில் யானை சின்னம்: தலையிட தேர்தல் ஆணைக்குழு மறுப்பு



சென்னை, ஒக். 02

நடிகர் விஜய் கட்சி கொடியில் யானை சின்னம் பயன்படுத்திய விவகாரத்தில் தலையிடமாட்டோம் என பகுஜன் சமாஜ் கட்சிக்கு தேர்தல் ஆணைக்குழு பதிலளித்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கிய நடிகர் விஜய், கட்சி கொடியையும் பாடலையும் அறிமுகம் செய்தார்.

இந்த நிலையில் விஜய் கட்சி கொடியில், தங்களது சின்னமான யானையை பயன்படுத்தி இருக்கிறார் என்றும், தேர்தல் நேரத்தில் இது வாக்காளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் எனவும், விஜய் கட்சி கொடியில் இருந்து யானை படத்தை நீக்க வேண்டும் எனவும் கோரி பகுஜன் சமாஜ் கட்சியினர் தேர்தல் ஆணைக்குழுவில் மனு அளித்திருந்தனர். அந்தக் கட்சியின் புகாருக்கு தேர்தல் ஆணைக்குழு வழங்கிய பதிலில்,

"இந்திய தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்துக்கு, தற்காலிக சின்னம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு முன்புதான் ஒரு கட்சி விண்ணப்பித்து சின்னத்தைப் பெற முடியும். அரசியல் கட்சிகளின் கொடிக்கு, தேர்தல் ஆணைக்குழு ஒருபோதும் ஒப்புதல், அங்கீகாரம் வழங்குவது இல்லை. கொடி விவகாரத்தில் தேர்தல் ஆணைக்குழு தலையிடாது"- என்று குறிப்பிட்டுள்ளது. (எ)

# வாரிசு அரசியல் பற்றி பா. ஜ. க. பேசக்கூடாது

## தமிழக காங்கிரஸ் தலைவர்

சென்னை, ஒக். 02

"வாரிசு அரசியல் பற்றி பா. ஜ. கவினர் பேசக்கூடாது. பா. ஜ. க. தலைவர்கள் 60 பேரின் வாரிசுகள் அரசியலில் பல்வேறு பொறுப்புகளில் இருக்கிறார்கள். இந்த விடயத்தில் பா. ஜ. க. இரட்டை வேடம் போடக்கூடாது"- இவ்வாறு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில், இந்திரா தோழமை சக்தி இயக்கத்தின் மாதாந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

"தமிழக துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் உதயநிதிக்கு, தமிழக காங்கிரஸ் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் பத்திரம் மூலம் பா. ஜ. க. பெருமளவு நன்கொடை பெற்றது விரைவில் வெளிச்சத்துக்கு வரும்.

வெறுப்பு அரசியலை மக்கள் வேடிக்கை பார்க்கமாட்டார்கள். இந்தியாவில் அரசியல் ரீதியாக பழிவாங்கும் போக்கை அனைத்து அரசியல் கட்சிகளும் கைவிட வேண்டும். காமராஜர் ஆட்சிக் காலத்தில் இருந்த நாகரீகம் இப்போது வரவேண்டும்."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற இம்யுனோகுளோபுலின் மருந்து மீண்டும் இந்தியாவிலிருந்து இறக்குமதி!

## விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முறைப்பாடு

கொழும்பு, ஒக். 02

**தரமற்ற இம்யுனோகுளோபுலின் மருந்துகள், நாட்டுக்கு மீண்டும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் விசேட வைத்திய நிபுணர், சமன் சஞ்ஜீவ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.**

தரமற்ற மருந்து மற்றும் தடுப்பூசிகள் சந்தையில் விநியோகிக்கப்பட்டு, மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய சம்பவங்கள் கடந்த காலங்களில் நாட்டில் நிகழ்ந்திருந்தன.

இந்த சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை நடத்தியிருந்த நிலையில், முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தரமற்ற மனித இம்யுனோகுளோபுலின் மருந்துகளை நாட்டுக்கு இறக்குமதி செய்த குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், மீண்டும் இந்தியாவிலிருந்து தரமற்ற மனித இம்யுனோகுளோபின் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக தீவிர மற்றும் விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறும், விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்ஜீவ குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

இது குறித்து விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்ஜீவ தெரிவிக்கையில்-

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, கைது செய்யப்பட்ட விளக்கமறியலில் இருந்த காலத்திலும், நாட்டுக்கு இந்தியாவிலிருந்து தரமற்ற இம்யுனோகுளோபுலின் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மருந்து விநியோகப் பிரிவின் தலைவர் தேதுன் டயஸினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இம்யுனோகுளோபுலின் மருந்துகளும் தரமற்றவை என்பதால், செப்ரெம்பர் மாதத்திலேயே இந்த மருந்துத் தொகைகளை பயன்பாட்டிலிருந்து நீக்கிவிட்டதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீண்டும் மீண்டும் தரமற்ற மருந்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்படும் நிலையில், சிறார்கள் முதல் பெரியவர்கள் வரையானோரின் உயிருக்குள்ள உத்தரவாதம் தான் என்ன? மருந்துகளின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல், மருந்துகளின் பதிவின்போது மேற்கொள்ளப்படும் உரிய முறைகளுக்கு அப்பாற் சென்று, அரசியல்வாதிகள் அல்லது அதிகாரிகள் தேவைக்காகவே இவ்வாறான மருந்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்படுகின்றன.

இந்த மருந்து தற்போது பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டாலும், இதனைக் கொண்டுவர செலவான மில்லியன் கணக்கான நிதிக்கு யார் பொறுப்பு கூறுவது? எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்தி, அனைத்து அதிகாரிகளுக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# சிறீ லங்கன் எயார் லைன்ஸ் தனியார் மயமாக்கப்படாது!

கொழும்பு, ஒக். 02

சிறீ லங்கன் எயார் லைன்ஸை தனியார் மயப்படுத்தும் முன்னைய அரசாங்கத்தின் திட்டம் கைவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு சிறீ லங்கன் எயார் லைன்ஸின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பேரவை தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

எனவே, சிறீ லங்கன் எயார் லைன்ஸை தனியார் மயப்படுத்தப்போவதில்லை என்றும் அதன் முகாமைத்துவம் விரைவில் சீரமைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

முன்னதாக சிறீ லங்கன் எயார் லைன்ஸின் 51 கோடி அமெரிக்க டொலர் கடனுக்காக 51சதவீத பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு முன்னைய அரசாங்கத்தின் அமைச்சரவை ஒப்புக் கொண்டிருந்தது என்பது சுட்டிக்காட்டத்தாக்கது. (ஐ)

# பெண் பொலிஸின் கால்களை படமாக்கிய இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 02

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கால்களை காணொளியாக பதிவு செய்து அதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த இரு இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிலாபம் பங்கதெனிய மற்றும் குமாரக்கட்டுவை பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞர்கள் வேறொரு முறைப்பாட்டின் விசாரணைகளுக்காக கடந்த 27 ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்கு சென்றிருந்த நிலையில், கடமையில் இருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கால்களை காணொளியாக பதிவு செய்து அதனை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர்.

சமூக ஊடகங்களில் தனக்கு அவமானம் ஏற்படுத்தும் வகையில் காணொளி வெளியிடப்பட்டுள்ளதாக கூறி பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் அதிகாரி, உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்த பின்னர் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரையும் கைது செய்துள்ளனர். (அ)

# புதையல் தோண்டுவதற்கு முற்பட்டவர்கள் மீது சூடு!

கொழும்பு, ஒக். 02

மந்தாரம் நுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எலமலை வனப்பகுதியில் அதிகாலை புதையல் தோண்ட முற்பட்டவர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மந்தாரம் நுவர பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பு செய்து சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் சென்றவேளை குறித்த சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல முயற்சித்த போது பொலிஸார் துப்பாக்கி சூட்டை நடத்தியுள்ளனர்.

இதில் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் நான்கு சந்தேக நபர்கள் தப்பிச் சென்ற நிலையில் அவர்களையும் பின்னர் கைது செய்துள்ளனர்.

புதையல் தோண்ட முற்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 40 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் இதில் தற்காலிகமாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காலிமுகத்திடலில் நிறுத்தப்பட்டிருக்கும் 107 வாகனங்கள் பொலிஸ் பாதுகாப்பில்!

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 107 வாகனங்கள் தற்காலிகமாக பொலிஸ் பாதுகாப்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் தரித்து நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டதன் பின்னர் கடந்த சில தினங்களில் ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 107 வாகனங்கள் தற்காலிகமாக பொலிஸ் பாதுகாப்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்துக்குள் அதிக வாகனங்களை நிறுத்த முடியாத காரணத்தினால், ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே உள்ள பகுதியில் அந்த வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.இந்த வாகனங்கள் காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

குறித்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் வழமையான ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாக முன்னாள் ஜனாதிபதியினால் அரசியலமைப்பின் 41(1) பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தனிப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் என குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த வாகனங்களைப் பயன்படுத்தியவர்களின் முழுமையான பட்டியலையும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது. அதில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (அ)

# ஊழல் மோசடிகளை ஆராய விசேட விசாரணைப் பிரிவு!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக விசேட விசாரணைப் பிரிவை நிறுவுவதற்கு தேசிய மக்கள் சக்தியின் இடைக்கால அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் திறம்பட செயல்படுத்தப்படுவதை தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் உறுதி செய்யும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவற்றுடன் முன்னேறும் அதே வேளையில்



பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதிலும் கவனம் செலுத்தவுள்ளது.

மேலும் இடையூறு இல்லாத சமூகமான மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியின் ... தார். (அ)

# வாக்குவாதம் முற்றி ஒருவர் படுகொலை!

கொழும்பு, ஒக். 02

வாக்குவாதம் முற்றி மண்வெட்டியால் தாக்கி நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் மகளை திருமணம் செய்யவிருந்த நபரினால் இந்த கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மாலை வெயங்கொட, கெமுனு மாவத்தை, பத்தலகெதர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தலகெதர, வெயங்கொட பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரும் மோதலில் காயமடைந்து பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வத்துபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுக்திய கைது நடவடிக்கைகள் ஊடக படம் காட்டுதல் மட்டுமே!

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 02

**'யுக்திய' நடவடிக்கையின் எதிர்பார்த்த நோக்கங்கள் எட்டப்படவில்லை என பொலிஸ் தலைமையகம் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.**

'யுக்திய' நடவடிக்கையானது ஊடக நிகழ்ச்சியாக மட்டுமே இருந்ததாகவும், கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் போதைப்பொருள் சோதனைகள் அதிகரிக்கவில்லை எனவும் பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

உயர்மட்ட போதைப்பொருள் வியாபாரிகளை கைது செய்வதற்கு பதிலாக உயர் பொலிஸ் அதிகாரிகள் குழு வழங்கிய ஆவணத்தின் பிரகாரம் சாதாரணமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு விட்டு விலகியவர்கள் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்கள் கைது செய்யப்பட்ட நேரத்தில் போதைப்பொருள் வர்த்தகத்தில் இருந்து விலகி இருந்தனர்.

அதுமட்டுமின்றி, கைது செய்யப்பட்டவர்களில் பலர் போதைக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இல்லை எனவும் பொலிஸ் தலைமையகம் மேற்கொண்ட தொடர் கண்காணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

கடற்படையினரால் கடலுக்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளிலும் கைப்பற்றப்பட்ட பெருமளவிலான போதைப்பொருள் 'யுக்திய' நடவடிக்கையுடன் தொடர்புடையது என ஊடக நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏதோ ஒரு அரசியல் நோக்கத்திற்காக 'யுக்திய' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றுவதாகவும், இதன் காரணமாக பொலிஸ் நிலையங்களின் வழமையான கடமைகள் கிட்டத்தட்ட முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபர் 'யுக்திய' நடவடிக்கைக்கு உத்தியோகத்தர்களை மீண்டும் சாதாரண சிவில் கடமைகளுக்காக ஈடுபடுத்தியுள்ள போதிலும், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இடம்பெற்று வருவதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'யுக்திய' நடவடிக்கையின் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (அ)

# ரயிலில் பயணித்த பல்கலை மாணவியின் கால்களை வீடியோ எடுத்த சிப்பாய் கைது!

கொழும்பு, ஒக். 02

ரயிலில் பயணித்த பல்கலைக்கழக மாணவியின் கால்களைக் காணொளி எடுத்ததாகக் கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

பெலவத்தை இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான இராணுவ சிப்பாய் கொழும்பிலிருந்து பொல்கஹவெல நோக்கிப் பயணித்த ரயிலிலிருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரின் கால்களை இரகசியமாக தனது கையடக்கத் தொலைபேசியில் காணொளி எடுத்துள்ளார்.

இதனை அவதானித்த பயணிகள் சிலர் குறித்த பல்கலை மாணவியிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

பின்னர், ரயிலிலிருந்த பயணிகள் சிலர் இணைந்து சந்தேக நபரைப் பிடிக்க முயன்றபோது சந்தேக நபர் கையடக்கத் தொலைபேசியை விட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் தனது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜதந்திர கடவுச்சீட்டு பாவிக்க தடை!

கொழும்பு, ஒக். 02

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது இராஜதந்திர கடவுச்சீட்டைப் பயன்படுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

அவர்கள் வெளிநாடு செல்ல வேண்டுமாயின், சாதாரண கடவுச்சீட்டின் மூலம் பயணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர், இராஜதந்திர கடவுச்சீட்டுகள், கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள் உள்ளிட்ட சலுகைகளும் ரத்து செய்யப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். (அ)

# அரச வாகனத்தை நான் பயன்படுத்தவேயில்லை!

## பத்ம உதயசாந்த குணசேகர

கொழும்பு, ஒக். 02

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அண்மையில் அரச வாகனங்களை திருப்பி அனுப்பியவர்களின் பட்டியலில் தனது பெயரும் உள்ளடங்கியமை தவறான தகவல் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

புதிய நிர்வாகத்தினால் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட பட்டியலின்படி, பத்ம உதயசாந்த குணசேகர டொயோட்டா ஹிலக்ஸ் வாகனத்தை திருப்பி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் டொயோட்டா ஹிலக்ஸ் வாகனத்தை பயன்படுத்தியதாகவும், தான் பாராளுமன்ற உறுப்பினர் எனவும் வெளியான தகவல் பொய்யானது என சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் 2004 இல் மொனராகலை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு நுழைந்து 2015 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

2020 வரை பாராளுமன்ற உறுப்பினராக சேவை செய்தேன். இதன் பின்னர் நான் ஒரு சுயாதீன நபராகவும் பாராளுமன்ற உறுப்பினர் அல்லாதவராகவும் இருந்தேன்.

தனிப்பட்ட காரணங்களுக்காக நான் அரசியலில் இருந்து விலகி, இலங்கை அரசியல் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

எனது பெயர் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நான் அரச வாகனத்தை பயன்படுத்தவில்லை -என்றார். (அ)

# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு புதிய கட்டுப்பாட்டாளர் நாயகமாக நிலுஷா

கொழும்பு, ஒக். 02

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகமாக கடமையாற்றிய ஹர்ஷ இலுக்பிட்டிய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவரை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி தற்போது பொது பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி பி. எம். டி. நிலுஷா பாலசூரியவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலத்திரனியல் விசா நடைமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்த தவறியமைக்காக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இல்லுப்பிட்டிய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பறிக்கப்பட்ட பிரஜாவுரிமையை மீளவழங்குமாறு கேட்கவுள்ளேன்

## கூறுகிறார் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு, ஒக். 02

பறிக்கப்பட்ட தனது பிரஜாவுரிமையை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மீள வழங்க வேண்டும் என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

எனக்கு முழு மன்னிப்பு வழங்கி எனது பிரஜாவுரிமையை மீள வழங்கவேண்டும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளேன் என அவர் கூறினார்.

எனது பிரஜாவுரிமையை மீள வழங்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளேன். முன்னாள் ஜனாதிபதி எனக்கு மன்னிப்பு வழங்கினார். எனினும் எனது வாய் பூட்டப்பட்டுள்ளது. அரசியலில் ஈடுபட எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனது பிரஜாவுரிமை குறித்து புதிய ஜனாதிபதியிடம் நான் வேண்டுகோள் விடுப்பேன். எந்த குற்றச்செயலுக்காகவும் நான் சிறைத் தண்டனை அனுபவிக்காததால் எனக்கு எனது பிரஜாவுரிமை மீள கிடைக்கும் என நான் நம்புகின்றேன்-என்றார். (அ)

# முப்படை வீரர்களின் கொடுப்பனவு முழுமையாக நிறுத்தப்படவில்லை!

கொழும்பு, ஒக். 02

விசேட பிரமுகர்களின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள முப்படை வீரர்களுக்காக வழங்கப்படும் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், முழுமையாக நிறுத்தப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேட பிரமுகர்களின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள முப்படை வீரர்களுக்காக வழங்கப்பட்டு வரும் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக, சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றின் மூலம் பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

முன்னாள் விசேட பிரமுகர்களின் பாதுகாப்புக்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்கள் 2024 செப்ரெம்பர் 22 பின்னர், விசேட பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்.

இதனால் அவர்களுக்கு வழங்கப்படும் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் 2024 செப்ரெம்பர் மாதம் 22 வரையே உரித்தாகும்.

பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படை வீரர்களுக்காக வழங்கப்படும் இந்த கொடுப்பனவு நிறுத்தப்படவில்லை-என உள்ளது.

# ஜனாதிபதி அநுரவை சந்தித்த ரஷ்ய தூதுவர்

கொழும்பு, ஒக். 02

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் வாழ்த்து செய்தியுடன் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ் ஜகார்யன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பில் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்பையும் ரஷ்ய தூதுவர் விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பில் இரு தரப்பு ஒத்துழைப்பு சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர்.

உக்ரைன் மோதல் தொடர்பில் ரஷ்யாவின் நிலைப்பாட்டை தூதுவர் எடுத்துரைத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை திட்டங்களை மீளாய்வு செய்ய அரசு தீர்மானம்

## பொதுத்தேர்தலின் பின்னர் இறுதி முடிவு

கொழும்பு, ஒக். 02

**அதானி குழுமத்தின் காற்றாலை மின்திட்டம் உட்பட அனைத்து இந்திய-இலங்கை இணைப்பு திட்டங்கள் குறித்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீள ஆராய வுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

வடக்கில் அதானி குழுமத்தின் மின்சக்தி திட்டம் உட்பட இந்தியாவுடன் இலங்கையை இணைக்கும் அனைத்து திட்டங்கள் குறித்தும் மீளாய்வு செய்வதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுத்தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றம் அமைந்ததும் இந்தியாவுடனான திட்டங்கள் குறித்து அரசாங்கம் இறுதி முடிவை எடுக்கும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவுடனான இணைப்பு திட்டங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. அந்த திட்டங்களின் தற்போதைய நிலை குறித்த மதிப்பீடுகளுக்காக இந்த மறு ஆய்வு இடம்பெறுகின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுத் தேர்தலின் பின்னரே அவற்றை தொடர்ந்து எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து தீர்மானிப்போம் என தெரிவித்துள்ள விடயமறிந்த வட்டாரங்கள், தொடர்ந்தும் அந்த திட்டங்களை முன்னெடுப்பதா அல்லது ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் மாற்றங்களை மேற்கொள்வதா? அல்லது நாங்கள் முன்வைக்கும் விடயங்களுடன் புதிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா என்பதை தீர்மானிப்போம் என குறிப்பிட்டுள்ளன.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் எந்த தீர்மானத்தையும் எடுப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் கூறின.

(அ)

# ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 02

இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில், பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 9.5 சதவீதம் அதிகரித்து 1.22 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இந்த வருடத்தில் பதிவான அதிகூடிய மாதாந்த பெறுமதி என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெளி நாட்டு பணியாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட தொகையும் 577 மில்லியன் டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஓகஸ்ட் மாதத்தில் வர்த்தக இருப்பு எதிர்மறையாக 430 மில்லியன் டொலர்களாக இருந்ததாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுபானசாலைகள் நாளை பூட்டு

கொழும்பு, ஒக். 02

உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாளை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானச்சாலைகளும் மூடப்படும் என மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மது அருந்துவதால் உலகளாவிய ரீதியில் வருடத்துக்கு 3 மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், மது அருந்துவதால் நாட்டில் நாளொன்றுக்கு 50 மரணங்கள் பதிவாகுகின்றன.

எனவே, உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானச்சாலைகளும் மூடப்பட வேண்டும் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது.

# பரீட்சை வினாத்தாள் வெளியான விடயம்: நியாயம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

## அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 02

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் வெளியான விடயத்தில் நியாயத்தை பெற்றுத்தர அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முதலாவது அமைச்சரவை கூட்ட முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

அதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை வினாக்கள் வெளியான விடயம் கடந்த அரசாங்கத்தின் ஆட்சியில் இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் அதற்கான உரிய தீர்வை தற்போது வழங்க வேண்டியது எம்முடைய பொறுப்பாகும். அதற்கமைய குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கயை 3 வினாக்கள் வெளியாகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

ஆகவே அதற்கான முழுமையான புள்ளிகளை மாணவர்களுக்கு வழங்க நவடிக்கை எடுக்கப்பட்டதுடன், குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர். இருப்பினும் பெற்றோர் 8 வினாக்கள் வெளியாகியுள்ளதாகவும், அதற்கான நியாயத்தை பெற்றுத்தரமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளனர். ஆகவே இந்த விடயம் தொடரப்பில் கல்வி அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் பல கட்ட பேச்சுவார்த்தைகள் எடுக்கப்பட்டன. அதன் இறுதியில் புலமைப்பரிசில் பெறுபேறுகளை வெளியிடும் விடயத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 8 வினாக்கள் வெளியாகியுள்ளதாக குறிப்பிடப்படும் விடயத்தில் உள்ள உண்மைத்தன்மையை கண்டறிய சாட்சியங்களை நாளைய தினத்திற்குள் சமர்ப்பிக்குமாறும் தெரிவித்துள்ளோம். அவ்வாறு 8 வினாக்கள் வெளியாகியுள்ளதாயின் பொலிஸாரின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசாங்கம் என்ற விடயத்தில் தீர்வை வழங்கும் விடயத்தை கைவிடப்போவதில்லை.

அதேபோன்று பெற்றோர் மீண்டும் பரீட்சையை நடத்துமாறு கோருகின்றனர்.

அனைவருக்கும் நியாயத்தை பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமையே ஏற்படும். ஏனெனில் 3 இலட்சம் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இத்தகைய பின்னணியில் பெற்றோருக்கு குறைந்த பட்ச நியாயத்தை பெற்றுக்கொடுக்க வல்ல வகையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார். (அ)

# விபத்தில் 20 பேர் காயம்!

கொழும்பு, ஒக். 02

அவிசாவளை - கேகாலை பிரதான வீதியில் கொட்ட பொல விதிக்கு அருகில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7.50 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

விபத்தின்போது, பஸ் சாரதி உட்பட 20 பேர் காயமடைந்துள்ள நிலையில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் சாரதியின் கவனக்குறைவினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# ஜனாதிபதியின் பெயரைக் கூறி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் குழப்பம் ஏற்படுத்திய நபர்!



வவுனியா, ஒக். 02

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆதரவாளர் எனக் கூறி நபரொருவர் குழப்பத்தை ஏற்படுத்தியமையினால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

சர்வதேச சிறுவர் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அந்த பகுதிக்கு வந்த இனம் தெரியாத நபர் ஒருவர், இது ஜனாதிபதி அநுரவின் ஆட்சி நீங்கள் எல்லாம் வயிறு வளர்க்கிறீர்கள். உங்களுக்கு பணம் வருகின்றது என போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

உங்களை பொலிஸில் பிடித்துக் கொடுப்பேன். நான் அனுர குமாரவுடனேயே இரு வருடமாக நிற்கிறேன். பொலிஸும் புலனாய்வுப் பிரிவும் வந்து இப்போது உங்களை கைது செய்வார்கள். நாய்களே எல்லோரும் வீடு செல்லுங்கள் என்று ஒருமையில் கண்டபடி திட்டியுள்ளார்.

இதனையடுத்து காணாமல் போன உறவுகளும் அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் குறித்த நபர் அவர்களை அச்சுறுத்தியபடி அந்த பகுதியில் இருந்து கலைந்து சென்றுள்ளார்.

(அ)

# தமிழரை தேசிய இனமாக அங்கீகரித்தால் அநுரவுடன் இணைந்து செயல்படத் தயார்!

## சி. வி.விக்னேஸ்வரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 02

புதிய ஜனாதிபதியின் போக்கு திருப்திகரமாக இருக்கிறது. அவர் தமிழ் மக்களை தேசமாக அங்கீகரித்து செயற்பட்டால், அவருடன் இணைந்து பயணிப்போம் என முன்னாள் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரவுக்கு பாராளுமன்றில் எனக்கு அருகில் உள்ள ஆசனம் தான் ஒதுக்கப்பட்டு இருந்தது. அவர் பேசுவதனை நான் ஆவலுடன் பார்த்துக் கொண்டு இருப்பேன்.

அவர் உற்சாகமாக பேசுவார். யாராவது குறுக்கிட்டால் அவர்களின் பின்னணி பற்றி கதைப் [illegible] தவர்.

அவர் ஒரு தடவை என்னிடம் கேட்டார். எங்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என ஏன் கூறினீர்கள் என, அதற்கு நான் சொன்னேன்- வடக்கு-கிழக்கை பிரித்தது நீங்கள் தான் என தமிழ் மக்களுக்கு தெரியும். அதனால் அவர்கள் உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என, அதற்கு அவர் பார்ப்போம் என்றார்.

நான் சொன்ன மாதிரி தமிழ் மக்களின் வாக்குகள் குறைவாகவே கிடைத்தது. அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதும் அவருக்கு வாழ்த்து கூறியபோது, நான் சொன்ன மாதிரி தமிழ் மக்கள் பெரியளவில் உங்களுக்கு வாக்கு போடவில்லை என கூறினேன்.

அதேநேரம் , தமிழ் மக்களை நீங்கள் ஒரு தேசிய இனமாக, தேசியமாக கருதி செயல்பட்டால் நாமும் உங்களுடன் இணைந்து பயணிக்க முடியும் என கூறினேன். அவர் அதற்கு எதுவும் சொல்லவில்லை.

இதுவரை அவரின் செயல்பாடு திருப்திகரமாக எனக்கு தெரிகிறது. எனது பாதுகாப்புக்கு இருந்த 4 பொலிஸாரையும் திருப்பி எடுத்துவிட்டார்கள். அதனால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை. மனஸ்தாபமும் இல்லை.

பதுளையில் நான் மேல்நீதிமன்ற நீதிபதியாக இருந்த 1988ஆம் ஆண்டு கால பகுதியில் ஜே.வி.பி கிளர்ச்சி உக்கிரமடைந்திருந்த காலப் பகுதி. அப்போது எனக்கு பொலிஸ் பாதுகாப்பு தர கேட்டார்கள். நான் வேண்டாம் என மறுத்துவிட்டேன்.

ஏனெனில் ஜே.வி.பி யினர் ஆயுதங்களுக்காக பொலிஸாருடன் சண்டை போடுவார்கள். அதனால் எனக்கு தான் தேவையில்லா பிரச்னை. அதனால் பொலிஸ் பாதுகாப்பு வேண்டாம் என கூறி தனிய இருந்தேன் -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் தமிழ் கட்சிகள் ஓரணியில் போட்டியிட வேண்டும்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர்

கல்முனை, ஒக். 02

**"பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் கட்சிகள் ஓரணியில் இணைந்து போட்டியிட்டால் மட்டுமே அம்பாறை மாவட்டத்தில் தமிழ் ஆசனத்தை காப்பாற்ற முடியும்" என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மு. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.**

"அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். பல கோணங்களில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் வளங்கள் சுரண்டப்படுவதுடன், உரிமைகளும் திட்டமிட்டு பறிக்கப்படுகின்றன.

உதாரணமாக கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் யாவரும் அறிந்ததே.

இவ்வாறான நிலையில் கட்சி, சின்னம் என்று இழுபறி படாமல் விட்டுக்கொடுப்புடன் தமிழ் கட்சிகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

இல்லையேல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சுமார் ஓர் இலட்சம் தமிழ் வாக்குகளும் ஏழு, எட்டாக பிரிந்து எம் மக்களின்வாக்குகள் பயனற்று போகும் எமது ஆசனம் எமக்கு தீங்கு செய்யும் தரப்புக்கே சென்று விடும். ஆகவே, நிலைமையை கருத்தில் கொண்டு இருக்கும் குறுகிய நாட்களுக்குள் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நல்ல முடிவை தமிழ் கட்சிகள் எடுக்கும் என நம்புகிறேன்"- என்றார். (எ)

# 8 வயது சிறுமிமீது துஷ்பிரயோகம் 60 வயது நபருக்கு விளக்கமறியல்!

சம்மாந்துறை, ஒக். 02

8 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதான 60 வயது நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வீடுகளுக்கு சென்று குர்ஆன் ஓதுவிக்கும் நபரால் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முகம் கொடுத்த சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் இடம்பெற்றது.

இதேவேளை, சிறுமியை துஷ்பிரயோகம் செய்த நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ். ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்தனர்.

மேலும், குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன் கைது செய்யப்பட்ட நபரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தியபோது அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (எ)



# மக்களுக்கு குழாய் நீர் வசதி

பொத்துவில், ஒக். 02

அம்பாறை, பொத்துவில் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய களுகொல்ல கிராமத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு குழாய் நீர் விநியோகத்தை சுவிட்சர்லாந்தில் வாழும் பாண்டிருப்பைச் சேர்ந்த திருமதி ஜீவா விஜி திறைசிக்கம் செய்து மக்களிடம் ஒப்படைத்தார்.

சிவஜோதி அமைப்பின் தலைவர் மதி மற்றும் செயலாளர் நந்தினி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஓர் இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் இந்தக் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சமூகச் செயல்பாட்டாளர்களான கி. ஜெயசிறில், வா. குணாளன், எஸ். அருளம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

# காரைதீவு பிரதேச செயலாளராக அருணன் கடமைகளை ஏற்றார்

காரைதீவு, ஒக். 02

காரைதீவு பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஜி. அருணன் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னர் பிரதேச செயலாளராக இருந்த சிவ. ஜெகராஜன் பதவி உயர்வு பெற்று மேலதிக மாவட்ட அரசாங்க அதிபராக அம்பாறை மாவட்ட செயலகத்துக்கு சென்றதையடுத்து வெற்றிடம் ஏற்பட்டது.

இதன் பின்னர் இரு அதிகாரிகள் தற்காலிக பதில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நிரந்தரமாக நியமிக்கப்பட்ட அருணன் வாகரை பிரதேச செயலாளராக இருந்து இடமாற்றம் பெற்று வந்தவர்.



அவர் முன்னதாக காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையில் கலந்து கொண்டு ஆசி பெற்றார்.

பிரதேச செயலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்று கையொப்பமிட்டார்.

பின்னர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடனான விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டார். (எ)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதான ஐவருக்கு விளக்கமறியல்

கல்முனை, ஒக். 02

வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதான ஐந்து சந்தேக நபர்களையும் நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதிப் பகுதியில் வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

சிலர் வீடொன்றில் புதையல் தோண்டுவதாக பெரியநிலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஜே. எஸ். கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர்களை கைது செய்தனர்.

அத்துடன் கைதான ஐந்து



சந்தேக நபர்களையும் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ. எல். நதீர் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவர்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

பின்னர் திங்கட்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் இந்த 5 பேரும் முன்னிலைப்படுத்தப் பட்டிருந்த நிலையில் நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் வசிக்கும் நபர் உட்பட அவரது நண்பர்கள் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய பூஜை பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் கைப்பற்றி நீதிமன்றில் சான்றுப்படுத்தினர். (எ)

# காரைதீவு கண்ணகி இந்துவில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

காரைதீவு, ஒக். 02

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலயத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சிறுவர் தினக்கொண்டாட்டமும் பாண்ட் வாத்திய கருவிகள் அன்பளிப்பு நிகழ்வும் அதிபர் சீ. திருக்குமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.



அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம் ஒஸ்கார் அமைப் பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையிலான சீரகுட்டி குடும்பத்தினர் பாண்ட் வாத்திய கருவிகளை அன்பளிப்புச் செய்தனர்.

இதில் பிரதம விருந்தினராக காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. சஞ்சீவன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர்களாக ஒஸ்கார் அமைப்பின் சார்பாக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா, ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் இ. தவராசா, ஆசிரியர்களான இ. ரத்னகுமார், கே. லோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.


பாடசாலை இணைப்பாளர் திருமதி சோதீஸ்வரி கமலநாதன், ஆசிரிய ஆலோசகர் ரி. சிவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாண்ட் வாத்திய கருவிகள் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டன. சிறுவர் தின நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான்மீது இஸ்ரேல் தரைவழியில் தாக்குதல்

## போர் பதற்றம் உச்சம்



டெல் அவில், ஒக். 02

**லெபனான் மீது இஸ்ரேல் தரைவழித் தாக்குதலைத் தொடங்கிவிட்டது. அந்த நாட்டின் முக்கிய சில பகுதிகளை இலக்கு வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தரைவழித் தாக்குதலைத் தொடங்கிவிட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.**

இது தொடர்பில் இஸ்ரேல் இராணுவம் தனது அதிகார பூர்வ எக்ஸ் பக்கத்தில் நீண்ட விளக்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், "இஸ்ரேல் அரசியல் குழுவின் முடிவுக்கு இணங்க, தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் இலக்குகள் குறித்த உளவுத்துறை அளித்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் துல்லியமான இலக்குகளைக் குறிவைத்து, வரையறுக்கப்பட்ட பகுதிகளில், தரைவழித் தாக்குதல்களை இஸ்ரேல் இராணுவம் தொடங்கியுள்ளது. இந்த இலக்குகள் இஸ்ரேலின் எல்லைக்கு அருகில் உள்ள கிராமங்களில் அமைந்துள்ளன. இவை வடக்கு இஸ்ரேலில் உள்ள இஸ்ரேலிய மக்களுக்கு நீண்டகால அச்சுறுத்தலாக உள்ளன.

இந்தத் தரைவழித் தாக்குதலில் அண்மையில் இராணுவப் பயிற்சி அளித்து தயார்படுத்தப்பட்ட படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் விமானப்படை மற்றும் பீரங்கிப் படைகள் களத்தில் படையினருக்கு பக்கபலமாக இருக்கும்.

லெபனான் மீதான இந்தத் தரைவழித் தாக்குதல் இஸ்ரேலின் அங்கீகரிக்கப்பட்டு அரசியல் அதிகார சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது. ஒப்ரேஷன் 'நோர்தன் ஆரோஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கை சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப முன்னெடுத்துச் செல்லப்படும். அதேவேளையில், காஸா மற்றும் பிற முனைகளில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதலும் தொடரும்.


போரின் இலக்குகளை அடைய இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது, மேலும், இஸ்ரேல் குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் வடக்கு இஸ்ரேலின் குடிமக்களை அவர்களின் வீடுகளுக்குத் திரும்பச் செய்வதற்கும் தேவையான அனைத்தையும் செய்து வருகிறது" எனத் தெரிவித்துள்ளது.

லெபனான் மீது இஸ்ரேல் செப்ரெம்பர் 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்த தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1000-ஐ கடந்தது. நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டுமே 95 பேர் கொல்லப்பட்டனர். 170இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

(எ)

இந்தியாவிலிருந்து தப்பியோடிய

# மதபோதகர் ஜாகிர் நாயக்குக்கு பாகிஸ்தானில் அரசு வரவேற்பு



இஸ்லாமாபாத், ஒக். 02

இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியாக கருதப்படும் இஸ்லாமிய மதபோதகர் ஜாகிர் நாயக், பாகிஸ்தான் சென்றுள்ளார். அங்கு அவருக்கு அரசு சார்பில் வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

பணமோசடி வழக்கில் அமுலாக்கப் பிரிவு அதிகாரிகளால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர் ஜாகிர் நாயக். பிரபல மதபோதகரான இவர், பிற மதங்களைவிட இஸ்லாம் எவ்வாறு உயர்வானது என்பது குறித்து தனது பீஸ் தொலைக்காட்சி மூலம் விவாதங்களை நடத்தியவர். அவர் தனது விவாதங்களில் பிற மதங்களை கடுமையாக விமர்சித்ததாக அவர் மீது புகார் உள்ளது. இந்தியாவிலிருந்து தப்பியோடி மலேசியாவில் தஞ்சமடைந்த ஜாகிர் நாயக், பாகிஸ்தான் சென்றுள்ளார். தனது மகனும் இஸ்லாமிய மதபோதகருமான பரிக் நாயக்குடன் இஸ்லாமாபாத் சென்றுள்ள ஜாகிர் நாயக்குக்கு பாகிஸ்தான் அரசு உற்சாக வரவேற்பு வழங்கியுள்ளது.

(எ)

# அமெரிக்காவின் ட்ரோனை சுட்டு வீழ்த்திய ஹவுதிகள்

சனா, ஒக். 02

அமெரிக்காவின் ட்ரோனை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தினர்.

காஸா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து ஹமாஸ் அமைப்பு மீது இஸ்ரேல் போர் அறிவித்தது.

ஹமாஸுக்கு ஆதரவு வழங்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரிலும் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை இலக்கு வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அதே போன்று, செங்கடல் பகுதியில் பாதுகாப்பு, ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க ட்ரோன்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், செங்கடலில் அமெரிக்காவுக்கு சொந்தமான ட்ரோனை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தினர். எம். கியூ - 9 என்ற அதிநவீன ட்ரோனை ஏவுகணை மூலம் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தினர்.

(எ)

ஹிஸ்புல்லாமீது தாக்குதல்

# இஸ்ரேல் பிரதமருடன் இந்திய பிரதமர் பேச்சு

புதுடில்லி, ஒக். 02

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் பேச்சுக்களை நடத்தினார்.

லெபனானில் நிலைகொண்டுள்ள ஹிஸ்புல்லாக்கள் - இஸ்ரேல் இராணுவத்துக்கு இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. லெபனான் தலைநகர் பெய்ரூட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் வான்வழியாக தாக்குதல் நடத்தியது. இதில் 105 பேர் உயிரிழந்தனர். 360 பேர் காயமடைந்தனர். லெபனானில் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில், கடற்கரைகளில் தஞ்சமடைந்துள்ளனர். அடுத்த கட்டமாக லெபனான் எல்லைக்குள் தரைவழியாக நுழைந்து தாக்குதல் நடத்த இஸ்ரேல் இராணுவம் களமிறங்கியுள்ளது.

இந்தச் சூழலில் இந்தியப் பிரதமர் மோடி - இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, லெபனான் மீதான தாக்குதலை கைவிட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து மோடி சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில்,

"மேற்கு ஆசியாவின் தற்போதைய நிலவரம் குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் பேசினேன். உலகின் எந்த மூலையிலும் தீவிரவாதத்துக்கு இடம்வழங்கக்கூடாது. பிராந்திய பதற்றத்தை தணிக்க வேண்டும். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். மேற்கு ஆசியாவில் விரைவில் அமைதி திரும்பவும் ஸ்திரத்தன்மை ஏற்படவும் இந்தியா விரும்புகிறது"- என்று குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# அமெரிக்காவில் ஹெலன் சூறாவளியால் 116 பேர் பலி

வாஷிங்டன்,

அமெரிக்காவில் வீசிய சூறாவளியால் இதுவரை 116 பேர் பலியாகினர்.

அமெரிக்காவை ஹெலன் சூறாவளி கடந்த வியாழக்கிழமை நெருங்கியது. இதனைத் தொடர்ந்து, புளோரிடா பகுதியில் சூறாவளி பலவீனமடைந்து வெள்ளிக் கிழமை கரையை கடந்தது. இதனால், பல்வேறு இடங்களில் கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதி மற்றும் புளோரிடா மாகாணம் முழுவதும் பெரியளவில் அழிவை ஏற்படுத்தி சென்றது. சூறாவளியால் மணிக்கு 225 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

அமெரிக்கா மட்டுமின்றி மெக்சிக்கோவின் சில வீதிகளில் வெள்ளம் சூழ்ந்தும், மரங்கள் அடியோடு சாய்ந்தும் காணப்பட்டன. கியூபாவின் மேற்கே 2



இலட்சம் வீடுகள் மின் இணைப்பு வசதியின்றி துண்டிக்கப்பட்டன. சூறாவளியால் ஏற்பட்ட பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவில் ஹெலன் சூறாவளி தாக்கத்தால் 116 பேர் வரை உயிரிழந்தனர். புளோரிடா, ஜார்ஜியா, வடக்கு கரோலினா மற்றும் டென்னசீ மாகாணங்களில் பரவலாக பாதிப்பை ஏற்படுத்தி சென்றது. இந்தப் பகுதிகளில் வசித்து வரும் குடியிருப்புவாசிகளில் 20 இலட்சம் பேர் மின்சார வசதியின்றி தவித்து வருகின்றனர்.

(எ)

# நேபாளத்தில் வெள்ளம், நிலச்சரிவால் 204 பேர் உயிரிழந்தனர்

காத்மண்டு, ஒக். 02

நேபாளத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 204 பேர் உயிரிழந்தனர். 89 பேர் காயமடைந்தனர். 33 பேர் காணாமல் போயுள்ளனர்.

இராணுவம், பொலிஸ் மற்றும் ஆயுத பொலிஸ் படையினர் இணைந்து பேரிடரால் பாதிக்கப்பட்ட 4, 500 பேரை இதுவரை மீட்டுள்ளனர். அங்கு 3 நாட்களுக்கு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

நிலச்சரிவால் நெடுஞ்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தியா மற்றும் நேபாளத்தின் பிற மாவட்டங்களில் இருந்து காய்கறிகளை கொண்டு செல்வதில் தடை ஏற்பட்டுள்ளது. இதனால், மரக்கறிகளின் விலையும் உயர்ந்து காணப்படுகின்றன. பொதுமக்களும் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானசாலையை மூட உத்தரவு!

## மதுவரி ஆணையாளர் விடுத்தார்

மன்னார், ஒக். 02

**மன்னார், தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானச்சாலையை, தற்காலிகமாக மூடுமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்.**

மக்களின் எதிர்ப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுபானச்சாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம், இளைஞர் பயிற்சி நிலையம், காமன்ஸ், பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்றன. இந்தநிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி இங்கு மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது என்று மக்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

கடந்த மாதமும் இந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தோடு, இந்த மதுபானச்சாலையை திறக்க அனுமதிக்க வேண்டாம் எனக் கோரி மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர். தொடர்ந்து பல்வேறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையிலும் மது பான விற்பனை நிலையம் கடந்த வாரம் திறக்கப்பட்டதென மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த மதுபானச்சாலைக்கு எதிராக, நேற்று முன் தினம் ஒன்றுகூடிய மக்கள் பிரேதப் பெட்டி சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் சென்று மக்களுடன் கலந்துரையாடியதுடன், பிரச்னையை அரச அதிபர் உடனடியாக மதுவரி திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் குறித்த மது பானச்சாலையை தற்காலிகமாக மூடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று மதுபானச்சாலையை நிரந்தரமாக மூடுவதற்கு மக்கள் முயற்சித்து வருகின்றனர்.

(அ)

# சிறுவர்களுக்கான உலகத்தை நம் கைகளால் உருவாக்குவோம்

## ஜனாதிபதி அநுர வாழ்த்து

கொழும்பு, ஒக். 02

"உலகம் சிறுவர்களுக்கானது அவர்களின் உலகத்தை நம் கரங்களினால் உருவாக்குவோம்" என ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்த சிறுவர் தின வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

"ஏழ்மை போசாக்குக் குறைபாடு, சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு, கல்வியில் ஏற்றாத்தாழ்வு, சமூக வாய்ப்புக்களில் ஏற்றத்தாழ்வு, போதைப் பொருள் அத்துடன் தொழில் நுட்பத்தின் தவறான பயன்பாட்டிற்கு பலியாவது போன்றன இந்த மிலேனியத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

மேலும் சிறுவர்களின் உளவியல் சமூக வளர்ச்சியைத் தடுக்கும் சமூக விளைவுகள் மற்றும் மன அழுத்தம் நிறைந்த பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைகள் போன்ற தாக்கங்களில் இருந்து தற்போதைய தலைமுறைச் சிறுவர் சமூகத்தை விடுவித்து பிள்ளைகளுக்கே உரித்ததான சிறுவர் உலகை மீண்டும் அவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதே மறுமலர்ச்சிக் காலப் பணியின் முக்கியகுறிக்கோள்" என ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்படுவோம்-என்று கூறியுள்ளார். (அ)

# தேர்தலில் 50 வீத இட ஒதுக்கீட்டை கோரும் வடக்கு-கிழக்கு பெண்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 02

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பெண்கள் 50 சதவீதம் உள்வாங்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியம் சார்ந்து வடக்கு கிழக்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே குறித்த பெண்கள் குழு இதனை அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு ஆசன ஒதுக்கீடு சரிசமமாகப் பகிரப்பட வேண்டும் எனவும் தற்போது புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க பெண் பிரதமரை நியமித்து அரசியலில் பெண்களின் வகிபாகத்தை சமமாகப் பேணி வருகிறார்.

ஆண் அரசியல்வாதிகள், பெண்களுக்கு வாக்களியுங்கள் என்றும் படித்த ஆளுமை மிக்க தலைமைத்துவம் கொண்ட பெண்களை அரசியலில் ஈடுபடுத்தவேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்துவதில்லை.

எனவே பாராளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காகக் கட்சிகள் ஒவ்வொன்றும் பெண் பிரதிநிதிகளை உள்வாங்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியம் சார்ந்து வடக்கு கிழக்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரியுள்ளது. (அ)

# பரீட்சை வினாத்தாள்களை வெளியிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குக!

## மக்களுக்கான நாளை அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஒக். 02

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களை இரகசியமாக வெளியிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்களுக்கான நாளை அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவ்வமைப்பின் தலைவர் சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை மீளவும் நடத்துமாறு கோரி மாணவர்களின் பெற்றோர் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

இதுவொரு உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்னையாகும். மாணவர்களுக்கு மாத்திரமன்றி பெற்றோருக்கும் இது பாரிய சவாலாக அமைந்துள்ளது.

பரீட்சை வினாத்தாள் எவ்வாறு கசிந்தது? இதுவரை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான புள்ளியை வழங்கி இந்த விடயத்திலிருந்து தப்பித்துவிட முடியாது. வினாத்தாளை வெளியிட்ட அரச அதிகாரிகள் யார் என்பதை கண்டுபிடித்து கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் ஏனைய பரீட்சைகளிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்-என்றார்.

(அ)

# ஊழல் மோசடியுடன் தொடர்புள்ள எவரையுமே இணைக்கமாட்டோம்!

## ரஞ்சித் மத்தும பண்டார திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 02

இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே பாடேட்டியிட இருக்கிறோம். ஊழல் மோசடியுடன் தொடர்புபட்ட எவரையும் எமது கூட்டணியில் இணைத்துக் கொள்வதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு போட்டியிடுவது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் 56இலட்சம் வாக்குகளை வழங்கியுள்ளபோதும் அதற்கு எதிராக ஏனைய அனைத்து கட்சிகளுக்கும் 77இலட்சம் வாக்குகளை மக்கள் வழங்கி இருக்கிறார்கள். அவ்வாறான நிலைமையிலேயே தற்போது ஐக்கிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலுக்கு தயாராகி வருகிறது. ஐக்கிய மக்கள் கூட்டணி அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் எமது கூட்டணியில் இணைந்துகொள்ளாத பலர் பொதுத் தேர்தலில் இணைந்து கொள்ள இருக்கின்றனர். ஆனால் ஊழல் மோசடியுடன் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் யாரையும் எமது கூட்டணியில் இணைத்துக்கொள்ளப் போவதில்லை. அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

மேலும் காலிமுகத்திடலில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி ஊடக களியாட்டம் ஒன்றை காட்டி வருகிறது. 2005 மற்றும் 2019 இலும் காலிமுகத்திடலில் வாகனங்கள் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இது புதிய விடயமல்ல. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியிடமிருந்து மக்கள் புதிய மாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர்.

அதேநேரம் இந்த வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்யப்போகிறதா அல்லது வேறு தேவைக்கு பயன்படுத்தப்போகிறதா என நாங்கள் கேட்கிறோம். ஏனெனில் அரசாங்கத்தில் 3 அமைச்சர்களே இருக்கின்றனர். அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் வரையறுத்தே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் இந்த நியமனங்கள் அனைத்தும் வழங்கப்பட்டால் இருக்கும் வாகனங்களுக்கு என்ன நடக்கும் என்பதை மக்களுக்கு தெரிந்து கொள்ள முடியும்-என்றார்.

(அ)

# வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார் இந்தியத் தூதுவர்

கொழும்பு, ஒக். 02

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும், இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் நேற்று முன் தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து புதிய அமைச்சுப் பதவிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை பரந்துபட்ட வழிகளில் மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடியதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய தூதரகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் நேற்று முதல்!

கொழும்பு, ஒக். 02

நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இந்த பணிகள் எதிர்வரும் 8ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்த அனைவரும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்காக மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம் என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தகுதியான அனைத்து விண்ணப்பதாரிகளும், விண்ணப்பங்களை எதிர்வரும் 8ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தமது மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கையளிக்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுநரின்...

கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டன. இந்த நிலையில், அண்மையில் புதிதாக ஆளுநராக பதவியேற்ற ஆளுநர் நா. வேதநாயகன் அதனை நிறுத்தியுள்ளார். அத்துடன், தன்னிடமே மக்கள் நேரடியாக குறைகளை முறையிட முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## புதிய...

இனப்பிரச்னைக்கு தீர்வை வழங்க புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்.

அவ்வாறு உருவாக்கப்படும் அரசமைப்பு நாட்டு மக்களிடம் வழங்கப்பட்டு அவர்களின் கருத்துகளுடன்கூடிய கொள்கை மற்றும் வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்தமையை தொடர்ந்து அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அந்த வகையில் சில சட்ட சிக்கல்கள் உள்ளன. அந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

## பாராளுமன்ற...

தாம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை முதல் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்காக தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்தேன் எனவும் தமது பகுதியில் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்ததுடன், மக்கள் போராட்டங்களிலும் பங்கேற் றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் உரிமைக்காக தொடர்ச்சியாக தான் உழைத்துக் கொண்டிருப்பேன் என்பதை உறுதியாக கூறுகிறேன் எனவும் அவர் தனது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஐ.எம்.எவ்...

தொடர்ந்தும் முன்னெடுப்பது குறித்து மதிப்பீடுகள் நடைபெறும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும், இந்த மாத இறுதியில் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள கூட்டத்தின்போது சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா சிறீநிவாசன் தலைமையிலான உயர்மட்ட குழு இன்று இலங்கை வருகின்றது. இந்தக் குழுவினர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நாட்டில் தங்கியிருந்து பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவர் என்று அறிய வருகின்றது.

## காணாமல்...

ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள், முதியவர்கள் எனப் பலர் பங்கேற்று தமக்கான நீதியைக் கோரினர்.

இதேபோன்று, வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு நகரில் காந்தி பூங்கா முன்பாகக்கூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீதி கோரி சுட்டெரிக்கும் வெயிலிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோன்று, கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 7இல்)

## கூட்டமைப்பாக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் இணைய வேண்டும் என்று அண்மையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்தமை தொடர்பில் செய்தியாளர்கள் நேற்று அவரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய தினம் முன்னணியின் தலைமை பணிமனையில் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். இந்த சந்திப்பில், எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் அதன் சைக்கிள் சின்னத்தில் தனித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் - என்றும் கூறினார். (ஐ)

## புலமை...

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதி பதி பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் 3 கேள்விகள் தவிர, 8 கேள்விகள் பரீட்சைக்கு முன்பாகவே வெளியாகி இருந்தன. எனவே, அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் பெற்றோர்கள், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஈஸ்டர்...

அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது ஊடகவிய லாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில ளித்தபோதே அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த காலப்பகுதி தேர்தல் காலமாகும். அந்தவகையில் நாட்டின் நடவடிக்கைகள் அமைதியான முறையில் நடைபெறவேண்டும். இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து எந்தவித வன்முறை சம்பவங்களும் நாட்டில் பதிவாகவில்லை.

அந்த வகையில் தேர்தல் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடத் தேவையான சூழலை புதிய ஜனாதிபதி உருவாக்கிக் கொடுத்துள்ளார். எது எவ்வாறாக இருப்பினும் அவசர நிலைகள் ஏற்படாது என்ற கணிப்பில் இருக்கமுடியாது. தேசிய பாதுகாப்பு குறித்த விடயத்தில் முப்படையினர் பங்கு கொள்வர். ஆகவே, முன்னராகவே பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பது அவசியமான விடயமாகும்.

ஆகவேதான் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுத்தேர்தலை அடுத்து நிச்சயம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் அமைக்கப்படும். அதனைத் தொடர்ந்து ஊழல்வாதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

இதேபோன்று அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் சூழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறான விடயத்தை மேற்கொள்ள வேண்டாம் என தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். (ஐ)

# 3இல் 2 பெரும்பான்மையை அநுரவுக்கு வழங்கினால் நாடும் அரசும் அழியும்!

## உதயகம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 02

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிப் பெறும். எளிய பெரும்பான்மை பலத்தையே மக்கள் வழங்க வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினால் அரசாங்கமும் இல்லாதொழியும், நாடும் பாதிக்கப்படும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை மீள பெற்றுக் கொண்டுள்ளமை சிறந்த தீர்மானமாகும். அரச பாதுகாப்பை பெறுவதாயின், ஒன்று மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும் அல்லது உயிரச்சுறுத்தல் ஏதும் காணப்பட வேண்டும். நாங்கள் தற்போது மக்கள் பிரதிநிதிகள் அல்ல ஆகவே விசேட பாதுகாப்பு அவசியமற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்து செய்வதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் அரசியலுக்கு பிரவேசிப்பதற்கு முன்னர் வகித்த அரச உயர் பதவிகளை துறந்துள்ளார்கள். அவர்களால் இனி அரச சேவையில் இணைய முடியாது. ஆகவே ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பில் எடுத்துள்ள தீர்மானத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். - என்றார்.

## ஈழத்...

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டவை வருமாறு,

“இலங்கையின் புதிய ஜனாதிபதியாக சிங்கள பேரினவாத அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுன கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க பொறுப்பேற்ற பிறகு முதல் வெளிநாட்டுத் தலைவராக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வரும் 4ஆம் திகதி இலங்கை செல்கிறார். இரு தரப்பு உறவுகளை வலுப் படுத்தும் நோக்குடன் அவர் மேற்கொள்ள விருக்கும் இந்தப் பயணம் அங்குள்ள தமிழர்களுக்கு பயனும் அதிகாரமும் அளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

இலங்கைப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் ஆகும் நிலையில் அங்கு நிகழ்த் தப்பட்ட கொடிய போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை தண் டிக்கப்படவில்லை. இலங்கை அரசமைப்பு சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆம் திருத்தத் தின்படி தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தினாலும்கூட எந்தப் பயனும் ஏற்படவில்லை.

இத்தகைய சூழலில் இலங்கை செல்லும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

13ஆம் அரசியல் சட்டத் திருத்தத் தின்படி தமிழர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட அதிகார பரவல் என்பது மிகமிகக் குறைவானதுதான் என்றாலும்கூட அதுவும்கூட 35 ஆண்டுகளாக சாத்தியமாகவில்லை. கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையை ஆட்சி செய்த கட்சிகள் அல்லாத புதிய கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாகியுள்ள நிலை யில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் வட, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தவேண்டும் பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைந்து தேர்தல் நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி இலங்கை ஜனாதிபதியை அமைச்சர் ஜெய்சங்கர் கண்டிப்புடன் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இன்றைய நிலையில் தமிழக மீனவர்கள் 162 பேர் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படியும் மீனவர் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண கூட்டுப் பணிக்குழுவை அமைக்கும்படியும் இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்த வேண்டுமென்று வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை கேட்டுக் கொள்கிறேன்.” - என்றார். (ஐ)

## பொது...

அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தத் தேர்தலில் நாங்கள் பிரிந்து நின்றால் அம்பாறை, திருகோணமலையில் இருக்கின்ற பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய்விடும். அங்கு மட்டுமல்ல, வன்னியிலும் எமக்கு பெரும் ஆபத்து உள்ளது. எமக்கான ஆசனங்கள் சிங்கள, முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து விடும் என்றும் அவர் கூறினார்.

நேற்று ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தரப்பு ஓரணியாக வேண்டும். தற்போதுள்ள பிரிந்து நிற்கும் செயல்பாட்டை தொடர்ந்து வைத்திருப்பது நல்லதல்ல. நல்லதோர் ஒற்றுமையான முடிவை எட்டி இந்தத் தேர்தலில் கூடுதலான ஆசனங்களைப் பெற வேண்டும். தமிழர் தரப்பில் உள்ளவர்கள் மக்களுடைய பிரச்னைகளை தீர்க்கக்கூடிய வகையில் ஆசனங்களை பெறுவதன் ஊடாகவே புதிய அரசாங்கத்தோடு பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியும். அந்த வகையிலே நீங்கள் ஒற்றுமையோடு இருந்தால்தான் எல்லா விடயங்களையும் சாதிக்க முடியும் என்று இந்தியத் தூதுவர் அவருடனான சந்திப்பில் எமக்கு சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், தமிழ் அரசுக் கட்சி ஒன்றாக சேர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது. இந்நிலையில் நான் ஓர் ஆலோசனையை முன்வைப்பதற்கு விரும்புகிறேன். இப்போதுள்ள களநிலவரம் எங்களுடைய பிரதிநிதித்துவம் குறைகின்ற செயல்பாடாகத்தான் காணப்படுகிறது. அண்மையில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்பதை காணக் கூடியதாகவும் உள்ளது. ஆனால், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் தமிழ் அரசுக் கட்சியிடம் கேட்டுக்கொள்கின்றோம். ஒரு பொதுச் சின்னத்திலே குறிப்பாக குத்துவிளக்கு சின்னத்திலும்கூட வலியுறுத்தாமல் எல்லோரும் இணைந்து ஒரு பொது சின்னத்திலே இந்த தேர்தலில் பங்குபற்றினால் அதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் ஆதரவாக இருக்கும்.

வன்னியைப் பொறுத்தளவிலும் இது ஓர் அபாயகரமான நிலைப்பாட்டில்தான் இருக்கிறது. சிங்கள பிரதிநிதித்துவம் கூடிவிடுமா என்ற ஓர் அச்சம் காணப்படுகிறது. எங்களுக்குள் பிரச்னைகள் தொடர்ந்தால் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் கூடுதலாகும் நிலைமையே உள்ளது.

எனவே, மக்கள் கோபப்படுமளவுக்கு எமது செயல்பாடுகள் இருக்காது - இருக்கவும்கூடாது. ஒரே அணியில் ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதுதான் சாதகமாக இருக்கும் - என்றார்.(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# எம்.பிக்கள், அமைச்சர்களுக்குரிய சிறப்புரிமை குறித்து ஆராய குழு!

## இரு மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, ஒக். 02

**பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் ஆகியோருக்குரிய சிறப்புரிமைகளை மட்டுப்படுத்தும் வகையில் அவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.**

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்றபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுடைய வாக்குகளால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிமாருக்கு சம்பளம், கொடுப்பனவு, ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லம், வாகனங்கள், பணியாட்குழாம், அலுவலக உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை வழங்குவதற்காக மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசு குறிப்பிடத்தக்களவு செலவை வருடாந்தம் மேற்கொள்கின்றது. தற்போதுள்ள அரசநிதியில் மேற்படி அதிகளவான செலவுகளைக் குறைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, அது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து திறைசேரிக்கு தேவையற்ற செலவுச் சுமைகளை ஏற் படுத்துகின்றதும் மற்றும் தர்க்க ரீதியற்ற உரித்துக்கள், கொடுப்ப னவுகள் மற்றும் சிறப்புரிமைகளை தர்க்க ரீதியான முறையில் மட்டுப் படுத்துவதற்கு அல்லது மாற்று முறைகளை அறிமுகப் படுத்துவதற்குப் பொருத்தமான விதந்துரை களுடன் கூடிய விபரமான அறிக் கையை இரண்டு மாதங்களில் சமர்ப் பிப்பதற்காக குழுவொன்றை நிய மிப்பதற்காக சட்டம், பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சராக பிரத மர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

அதன் பிரகாரம் ஓய்வுநிலை உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டீ. சித்திரசிறி, ஓய்வுநிலை அமைச்சின் செயலாளர் டி. திசாநாயக்க, ஓய்வு நிலை மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான ஜயந்தா சீ.டி. புளுமுல்ல ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ)

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுபாட்டு உரிமையில்லை!

## பிணைமுறி மோசடி குறித்து அமைச்சர் விஜித ஹேரத் பதில்



கொழும்பு, ஒக். 02

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது விடுபாட்டுரிமை இல்லை என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மத்தியவங்கி திறைசேரி பிணைமுறி மோசடி தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் இதனை கூறினார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்ததால் அவருக்கு விடுபாட்டுரிமை காணப்பட்டதால் முன்னர் மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியில்லை. அவருக்கு தற்போது விடுபாட்டுரிமையில்லை.

புதிய அரசாங்கத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவை நீதிமன்றத்தின் அழைப்பதற்கான அதிகாரம் உள்ளது. தற்போது சிங்கப்பூரில் அடைக்கலம் புகுந்துள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (அ)

# ஜனாதிபதி அநுரவுக்கு ஆலோசகர்களாக இருவர்!

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் ஆலோசகர்களாக இருவரை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியலமைப்பின் 41 ஆவது உறுப்புரையின் (01) ஆம் உப உறுப்புரையில் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம் அமைச்சரவையின் கருத்துகளைக் கேட்டறிந்து தனது பணிக்குழாமினரை நியமிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பொருளாதார விவகாரங்கள் மற்றும் நிதி தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர்களாக துமிந்த ஹூலங்கமுவ மற்றும் கலாநிதி.ஏ.ஏ.ஜே.பெர்னாண்டோ ஆகியோர் கௌரவ சேவை அடிப்படையில் நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. - என்றார். (அ)

# பஸ் கட்டணம் குறையும்

கொழும்பு, ஒக். 02

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் கட்டணத்தை 04 வீதத்தால் குறைக்க முடியும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதன்படி 28 ரூபாவாக உள்ள குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 25 ரூபாவாக குறைக்க முடியும் என அதன் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கட்டண திருத்தத்தின்போது ஒட்டோ டீசலின் விலை 11 ரூபாவினாலும் இன்றைய நிலவரப்படி 24 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் ஒட்டோ கட்டணத்தைக் குறைக்கும் சாத்தியம் இல்லை என அகில இலங்கை ஒட்டோ சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# எனது வாகனங்களை மீளப் பெற்றால் பஸ்ஸில் பயணிப்பதில் வெட்கமில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பு, ஒக். 02

எனக்கு வழங்கப்பட்ட வாகனங்களை அரசாங்கம் மீளப் பெற்றால் பஸ்ஸில் பயணிப்பதற்கு எனக்கு வெட்கம் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தினால் எனக்கு வழங்கப்பட்ட வாகனங்களை மீளப் பெற்றால் பஸ்ஸில் பயணம் செய்வதற்கு எனக்கு வெட்கம் எதுவும் இல்லை. நான் யாரையும் சார்ந்தும் இருக்கவில்லை.

நான் வேறு நபர்களுக்கு வழங்கியோ அல்லது யாரிடம் இருந்தும் பெற்றுக் கொண்டதோ இல்லை. ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறியபோது எனது வங்கிக் கணக்கில் பணம் எதுவும் இல்லை.

மகிந்த ராஜபக்ஷவின் 9 வருட கால ஆட்சியில் எனக்கான ஓய்வுநிலை பணமோ, சலுகைகளோ எதுவும் கிடைக்கவில்லை. எனது பணியாளர்களின் சம்பளம், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை நானே செலுத்தினேன்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீடு மற்றும் நான்கு வாகனங்களை தற்போது வரை பயன்படுத்தி வருகின்றேன். பயணம் செய்யும்போது ஒரு ஜீப், ஒரு கார் பாதுகாப்புக்காக இரண்டு வாகனங்களை பயன்படுத்தி வருகின்றேன் - என்றார். (அ)

# தேர்தல் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 02

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது.


ஆனாலும், 2024 வரவு - செலவுத் திட்டத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்காக திரட்டு நிதியத்திலிருந்து நிதியை விடுவிப்பதற்கு அரசியலமைப்பின்

150 ஆவது உறுப்புரையில் (4) உப உறுப்புரையின் மூலம் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான திரட்டு நிதியத்திலிருந்து 05 பில்லியன் ரூபாவை விடுவிப்பதற்காக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு ஏற்புடைய 2025 ஆம் ஆண்டில் ஈடுசெய்யப்பட வேண்டிய செலவான 06 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை 2025 ஆம் ஆண்டின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் இடைக்கால நிறைவேற்றுக் கணக்கின் மூலம் ஒதுக்கி வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (அ)

# ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்த அமெரிக்க தூதுவர்!



கொழும்பு, ஒக். 02

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது

இதன்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுர குமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்க தூதுவர், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இரு தரப்பு உறவுகளை தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

மேலும் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள், பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org